1990 மார்ச் 23]

திரு. பி. வி. இராஜேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, காட்டு இலாக்கா அதிகாரிகள் இதுவரையில் எத்தனை பேர்கள் சுடப்பட்டிருக்கிறார்கள்? அவர்களுடைய குடும்பங்களுக்கு அரசு ஏதாவது உதவி புரிந்திருக்கிறதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டவட்டமான பதில் என்னிடத்தில் இப்போது இல்லை. இருந்தாலும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விதத்தில், சிதம்பரம் என்ற வனத் துறை ரேஞ்ஜர், வீரப்பனோடு போராடி மாண்டார். அவர் குடும்பத்திற்கு உதவி செய்திருக்கிறோம். அதைப்போல வனத் துறை பாரஸ்டர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். தனியாகக் கேள்வி போட்டால் பதில் தர முடியும்.

சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மரங்கள் ஏலம் விடுதல்

* 585 திரு. ஆர். ஈஸ்வரன் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ஊராட்சி மன்றங்களில் உள்ள மரங்களை ஏலம் விடும்போது அத்தொகை முழுமையாக ஊராட்சி மன்றங்களுக்கு வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ஊராட்சி மன்றங்களில் உள்ள மரங்களை ஏலம் விடும்போது அத்தொகை முழுமையாக ஊராட்சி மன்றங்களுக்கு வழங்க திட்டம் ஏதும் இல்லை.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலமாக ஊராட்சி மன்றங்களில் கருவேல மரங்கள் நடப்பட்டு, 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏலம் விடப்படுகிறது. அதில் ஊராட்சி மன்றங்களுக்கு 60 சதவிகிதமும், அரசு 40 சதவிகிதமும் என்று அந்தப் பணம் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. எனவே அந்த 40 சதவிகிதம் பணத்தையும் சேர்த்து, ஊராட்சி மன்றங்களுக்கே முழுமையாக வழங்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 50 சதவிகிதம் ஊராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டு, தற்போது 60 சதவிகிதமாக

உயர்த்தப்பட்டிருக்கிறது. பாக்கி இருக்கும் 40 சதவிகிதத்தை, சம்பந்தப்பட்ட இடத்தின் பராமரிப்பை வனத் துறையே ஏற்றுக் கொண்டிருப்பதால், தர இயலாது என்பது குறிப்பு.

9-45 மணி

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களில் நிதிநிலைமைகள் மோசமாக இருக்கின்ற காரணத்தினால் அந்த 40 சதவீதத்தை ஊராட்சி மன்றங்களுக்கு வரவு வைத்தால், ஊராட்சி மன்றங்களினுடைய நலனைக் கருதி வாருகால், கழிப்பறை, சாலை அமைத்தல் போன்றவற்றைச் செய்வதற்கு நலமாக இருக்கும். அதுமட்டுமல்லாமல், அந்தத் தொகுதியிலுள்ள கருவேல மரங்களை ஏலம் விடும்போது அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த ஏலத்தில் கலந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பினை உருவாக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றினுடைய நிதி நிலையை உயர்த்துவதற்குத் தனிக் குழுவை அரசு அமைத்து இருக்கிறது. அதனுடைய பரிந்துரைக்குப் பிறகு இதை அரசு பரிசீலிக்கும்.

தண்டரை இராமத்திற்குச் செல்ல பாதை

*1700 திரு. ஏ. ஜி. சம்பத் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம், முகையூர் ஒன்றியம் தண்டரை கிராமத்திற்குச் செல்ல பாதை இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) சாலை வசதி அமைத்துத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கோ. சி.மணி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) :

தண்டரை—துவப்பூர் சாலையில் 1 கிலோ மீட்டர் சாலையிலிருந்து 1986—87-ல் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய 2 கிலோ மீட்டர் சாலைக்கு ரூ. 20,000 மதிப்பீட்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.